**கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2019**

**48 - இலக்கியநயம்**

**புள்ளி வழங்கும் திட்டம்**

| | | |
|---|---|---|
| பகுதி I | 1 ஆம் வினா | 04x05 = 20 புள்ளிகள் |
| | 2 ஆம் வினா | 05x05 = 25 புள்ளிகள் |
| பகுதி II | 3ஆம் வினா | 05x05 = 25 புள்ளிகள் |

பகுதி III ( எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும்)

4ஆம் வினா 15 புள்ளிகள்
5ஆம் வினா 15 புள்ளிகள்
6ஆம் வினா 15 புள்ளிகள்
7ஆம் வினா 15 புள்ளிகள்
} 15 x 02 = 30 புள்ளிகள்

**மொத்தம் 100 புள்ளிகள்**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ $\frac{4}{5}$
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** வினாப்பத்திரம் II இற்கான புள்ளி வினாப்பத்திரம் II இற்குரிய புள்ளி பட்டியலில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "**Total Marks**" எனும் நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது **முழுத்தானத்தில்** வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் பதியப்படலாகாது.**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# 48 - தமிழ் இலக்கிய நயம்

## பகுதி I

**1.** (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) "என்ன செய்வது எய்தினன்" - இக்கூற்று

(அ) யாரால், யாருக்குக் கூறப்பட்டது ?

(ஆ) எச்சந்தர்ப்பத்திற் கூறப்பட்டது ?

(ii) "வான்உறு மதியம் வந்தது என்று எண்ணி
மலர்க்கரம் குவியுமென்று அஞ்சி"

(அ) வான் உறு மதியம் என்று எண்ணியது எதை ?

(ஆ) வான் உறு மதியம் வருதலுக்கும் மலர்க்கரம் குவிதலுக்கும் இடையிலான இயைபு யாது ?

(iii) "உண்மையென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித் தவங் கொண்டடித்தால்"

(அ) சிலுவையில் கட்டியடிக்கப்பட்டது எது ?

(ஆ) சிலுவையாகவும் ஆணியாகவும் உருவகிக்கப்பட்டவை எவை ?

(iv) ஹைக்கூ 'பாதியாய்த் திறந்த கதவு; அதன்வழி எம்மை அழைக்கும் கைச்சைகை'

(அ) ஹைக்கூ கவிதை எவ்வெவ்வாறு உருவகிக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அந்த உருவகங்களின் பொருத்தப்பாடு யாது ?

(v) ஓரிரண்டு போர்களில் வெற்றி கண்டுவிட்டால் அது குடிப்பழக்கம்போல் ஆகிவிடும்.

(அ) குடிப்பழக்கம் எதற்கு உவமிக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அந்த உவமையின் பொருத்தப்பாடு யாது ?

($4 \times 5 = 20$ புள்ளிகள்)

(i) (அ) வானரரால் / வானர வீரரால் / குரங்குகளால் – தாரைக்கு

(ஆ) சுக்கிரீவன் நன்றி மறந்தான் என்ற கோபத்தோடு இலக்குமணன் கிஷ்கிந்தை நகர வீதியில் வந்தபோது

(ii)(அ) மங்கையின் முகத்தை

(ஆ) வானத்து நிலவின் வருகையைக் கண்டு தாமரை மலர் குவிந்து விடும். இங்கு மங்கையின் முகத்தை நிலவாகவும் கரங்களைத் தாமரை மலராகவும் காண்கின்ற வண்டு, நிலவு வந்துவிட்டது, எனவே தாமரை மலர் குவிந்து விடும் என எண்ணுகிறது.

(iii)(அ) உணர்வு

(ஆ) சிலுவை – உண்மை
ஆணி – தவம்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iv)(அ) பாதியாய்த் திறந்த கதவு, கைச்சைகை.

(ஆ) பாதியாய்த் திறந்த கதவை முழுமையாகத் திறந்து உட்செல்வதும் வெறும் சைகையாக அழைத்த அழைப்பை விளங்கி உட்செல்வதும் செல்பவனது பொறுப்பு. அதுபோலவே கவிதையில் உள்ள குறியீடுகளை / குறிப்புப் பொருளைப் பற்றிக்கொண்டு உள் நுழைந்து அதன் பொருளை முழுமையாக விளங்கிக் கொள்வது வாசகனது பொறுப்பு.

(v)(அ) போரில் வெற்றி காண்பதற்கு

(ஆ) குடிப்பழக்கம் ஒருவனுக்கு போதையைக் கொடுத்து அவனைத் தனக்கு அடிமையாக்குவதுபோல போரில் பெறும் வெற்றியே ஒரு போதையாகி தொடர்ந்து போர் செய்யத் தூண்டும்.

[ 4 x 5 = 20 புள்ளிகள் ]

**2.** கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக்கமழு தையா - இதில்,
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

கொட்டிய உப்புக் கசப்பதென் றாலுமுள்
கூடியினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீரபட்ட
விண்ணின் அமுதமையா

சொன்னபடிநட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா - இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுத மையா

ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடிவருகை யிலே - இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(i) கணவனின் பிரிவால் மனைவி அடைந்த துயர் எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது ?

(ii) 'அன்போடு இட்டதே அமுதம்' என்பது இக்கவிதையில் எவ்வெவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது ?

(iii) அந்த அமுதத்தை இட்ட அன்புக்கரங்கள் எவ்வெவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளன ?

(iv) குழந்தையின் இயல்பும் அக்குழந்தைமேல் தந்தை கொண்ட ஈடுபாடும் புலப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

(v) ஊதுகுழற் சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடிவருகை யிலே - இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

இவ்வடிகளினூடாக விவரிக்கப்படும் சம்பவத்தையும் சம்பவத்தினூடு மனைவியின் அன்பு புலப்படுமாற்றினையும் விளக்குக.

(i) – கணவனை விட்டுப்பிரிகின்றபோது மனைவியின் கண்ணிலிருந்து கண்ணீர்த் துளி விழுந்தது என்பதன் மூலம்.

(ii) – தன் தலைவியின் கையால் சமைத்ததால் அவ்வுணவு மிகவும் மணம் வீசுகிறது;
– அவ்வுணவில் அதிக உப்பு கொட்டப்பட்டிருந்தாலும் மனைவி அன்போடு தந்தது; (பிரிவுத் துயரால் துளிர்த்த) கண்ணீர்த் துளிகள் பட்டதால் அமுதமாகச் சுவைக்கிறது;
– ஆகக் கரிந்து பொரிந்த பொரியலாயினும் மனைவியின் அன்பு மணக்கிறது;
– நன்கு வேகவைக்காத உணவாயினும் விந்தை ருசி தருகிறது;
– அன்புக் கயிற்றினால் கட்டிய உணவுப்பொதி என்பதன் மூலம் அதைச் சுவைக்கையில் உள்ளம் எல்லாம் ஒளி மிளிர்ந்தது
என்றெல்லாம் கூறுவதன் மூலம்.

(iii) – தங்க வளைக்கைகள்
– தாமரைக்கை

(iv) **குழந்தையின் இயல்பு**
– சொன்னபடி நடவாமை
– துடிதுடிப்பு
– உணவினைத் தன் சின்னஞ்சிறு கரங்களால் அளைந்து சுவைத்தல்.

**குழந்தைமேல் தந்தை கொண்ட ஈடுபாடு**
– குழந்தையின் இயல்பை இரசித்துக் கூறுதல்.
– அக்குழந்தை அளைந்த உணவினை தெய்வ அமுதமாகச் சிலாகித்துச் சுவைத்தல்.

(v) **சம்பவம்**
– புகையிரதத்தின் ஊதுகுழற்சத்தம் கேட்டு கணவன் அவசரமாக ஓடிச்செல்லும்போது மனைவி தொடர்ந்தோடி வந்து உணவுப் பொதியினைக் கொடுத்தல்.

**மனைவியின் அன்பு**
– கணவன் பசி கிடக்க நேரிடுமே என்ற கவலையால் தன் சிரமத்தையும் பொருட்படுத்தாது அவதிப்பட்டு ஓடிவந்து கொடுத்ததன் மூலம்.

[ 5 x 5 = 25 புள்ளிகள் ]


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி II

**3.** கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கொஞ்சம் பழைய வீடுதான். ஆனால், அது ஓர் அழகான வீடு. பக்கத்துக் கொன்வென்றில் இருந்து வாத்தியம்மா சொல்லிக் கொடுக்கும் வாசகங்களை அப்படியே ஒப்புவிக்கும் பாலர்களின் ஒருமித்த குரல்கள் அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கும். வைத்தியசாலை வெகு கிட்டத்தில் இருந்தது. சந்தைகூட அவ்வளவு தூரத்தில் இல்லை. இவன் வீட்டுக்கு நேர் எதிரே புகைப்படப்பிடிப்பு நிலையம் ஒன்று இருக்கின்றது. தேவையானால் இவன் தன் வீட்டிலிருந்தே ஒப்பனை செய்துகொண்டு போய்ப் படம் எடுத்துக் கொள்ளலாம். அவர்களுடைய பௌடரையும், ஒல்லாந்தர் காலத்து அழுக்கு நிரம்பிய சீப்பையும் பாவிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அதற்குப் பக்கத்திலுள்ள பேக்கரியில் பாண் போடுவார்கள். 'கேக்'கும் போடுவார்கள். ஆனால் இரண்டுக்குமிடையில் அதிக வித்தியாசம் இருப்பதாக இதுவரையில் தெரியவில்லை. பாண் வேகும் முறுகலான மணம் அவ்வப்போது வீசிக்கொண்டிருக்கும்.

இவையெல்லாம் அந்த வீட்டுக்குக் குடிவந்த அவனைச் சந்தோசமடையச் செய்தன. ஆனால் அந்த வீட்டில் எலிகள் இருக்கும் என அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

எலிகளை அவனுக்கு எப்போதுமே பிடிக்காது. இவனைப் போலவே எலிகளைப் பிடிக்காத ஒருவன் தான் உயிரியல் பயிற்சி வகுப்புக்கு எலிகளை வெட்டி ஆராயும் முறையைக் கொணர்ந்திருக்க வேண்டும். எலிகளை மாத்திரமல்ல - பல்லி, கரப்பான்பூச்சி, பூரான், நத்தை... எல்லாவற்றுக்கும் மேலாக மிக அவதியுடன் கழிப்பறைக்குள் நுழையும்போது வழிமறித்துக்கொண்டு பேந்தப் பேந்த விழித்தபடி காத்துக் கொண்டிருக்குமே அந்தத் தேரை. இவற்றையெல்லாம் அவனுக்குக் கண்ணில் காட்டக்கூடாது.

(i) புதிதாகக் குடிவந்த வீடு குறித்து சந்தோஷமடையச் செய்த அம்சம் யாது ?

(ii) (அ) அந்த வீட்டில் அவனுக்குப் பிடிக்காத விடயம் எது ?

(ஆ) அதனை வெளிப்படுத்தும் பாங்கில் நீர் காணும் நயத்தினை விளக்குக.

(iii) புகைப்படப்பிடிப்பு நிலையம் வீட்டுக்கு அருகில் இருப்பது குறித்து அடையும் சந்தோஷத்துக்குக் கூறப்படும் காரணத்தில் புலனாகும் எள்ளல் தொனியினை விவரிக்குக.

(iv) (அ) பேக்கரியின் உற்பத்திப் பொருளின் தரம் குறித்து அவனின் அபிப்பிராயம் யாது ?

(ஆ) அது எவ்வாறு புலனாகின்றது ?

(v) (அ) தேரைமீது அவனது அதீத வெறுப்புக்கான காரணம் எவ்வாறு விவரிக்கப்படுகிறது ?

(ஆ) குறித்த ஜந்துகள் மீதான வெறுப்பினை பூரணமாகப் புலப்படுத்துவதற்கு 'கண்ணில் காட்டக்கூடாது' என்ற தொடர் எவ்வகையில் உதவுகிறது ?

($5 \times 5 = 25$ புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(i) – வீடு அழகாயிருந்தமை.

– வீட்டின் அருகில் பாடசாலை ( கொன்வென்ற் ), வைத்தியசாலை, சந்தை, புகைப்படப்பிடிப்பு நிலையம், பேக்கரி ஆகியவை இருந்தமை.

(ii) அ. எலிகள், பல்லி, கரப்பான் பூச்சி, பூரான், நத்தை, தேரை முதலான ஜந்துகள் வீட்டினுள் இருந்தமை.

ஆ. “எலிகளைப் பிடிக்காத ஒருவன்தான் உயிரியல் பயிற்சி வகுப்புக்கு எலிகளை வெட்டி ஆராயும் முறையைக் கொணர்ந்திருக்க வேண்டும்” என்று கூறுவதன் மூலமும்

“கழிப்பறைக்குள் நுழையும்போது வழிமறித்துக்கொண்டு பேந்தப்பேந்த விழித்தபடி காத்துக் கொண்டிருக்குமே அந்தத் தேரை” என்று கூறுவதன் மூலமும்

அவன் அவற்றின் மீதான தனது வெறுப்பை நயமாக வெளிப்படுத்துகின்றான்.

(iii) – புகைப்படப்பிடிப்புநிலையத்தில் இருக்கும் பாவனைக்குதவாத பொருட்களைப் பயன்படுத்து வதிலிருந்து தான் தப்பித்துக் கொண்டதாகக் கூறுவது.

– அவர்களது பௌடர், ஒல்லாந்தர் காலத்து அழுக்கு நிரம்பிய சீப்பு என்பன பற்றிய விவரிப்பு.

(iv) அ. தரமற்றவை.

ஆ. பாண் போடுவார்கள், கேக்கும் போடுவார்கள், பாணுக்கும் கேக்கிற்குமிடையில் அதிக வித்தியாசம் இல்லை என்று கூறுவதன் மூலம்.

(v) அ. “மிக அவதியுடன் கழிப்பறைக்குள் செல்லும்போது வழிமறித்துக்கொண்டு பேந்தப்பேந்த விழித்தபடி காத்துக் கொண்டிருக்குமே அந்தத் தேரை” என்று கூறுவதன் மூலம் உணர்த்தப்படுகின்றது.

ஆ. “கண்ணில் காட்டக்கூடாது” என்ற தொடர் வெறுப்பின் உச்சத்தை வெளிப்படுத்துகிறது. அதாவது அந்த ஜந்துகள் எவ்விடத்திலும் எப்பொழுதிலும் தன் கண்ணில் படுவதைக்கூட வெறுக்கிறான்.

[ 5 x 5 = 25 புள்ளிகள் ]


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி III

- எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.

**4.** 'மரம் என்பது உயர்திணை' என்ற பத்தி எழுத்தில்
   (i) மனிதனின் தாழ்வு
   (ii) மரத்தின் உயர்வு
   ஆகியன விவரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(i) **மனிதனின் தாழ்வு**

- மரங்களின் தயவில் வாழும் மனிதன் அந்த மரங்களையே அழிக்கின்றமை.
  (மரத்திலிருந்து கோடரிக் காம்பு செய்தல்)
- மனிதன் பிறந்த இடத்தைச் செலவு செய்பவன்.
- மனிதன் இறந்தால் எந்தப் பயனுமில்லை. (சுடுகாட்டுக்குச் செல்லல்)
- மனிதன் உயர்வானவற்றை இழிவானவை ஆக்குகின்றான்.
  (பூக்களில் புழுதியையும் கனிகளில் கழி நீரையும் செய்பவன்)
- மனிதர்களில் கொடையாளிகள் அரிது, பிறரிடம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டவன் மனிதன். மனிதன் கொடுப்பது கூட லாபம் பெறுவதற்காகவே.
- மனிதன் எப்போதும் கீழான சிந்தனைகளோடும், நடத்தைகளோடும் காணப்படுகின்றான்.
- மனிதன் பயனுள்ள மரங்களைப் படைப்பதில்லை. அழிவுக்கும், பகைக்கும் காரணமானவற்றையே படைக்கிறான்.

(ii) **மரத்தின் உயர்வு**

- சாலைகளில் நடப்பவர்களின் பயணத்தை மலர்கள் சொரிந்து ஆசீர்வதிப்பன, வெயில் தாக்காது குடை பிடிப்பன, களைப்படைந்தபோது தாய்ப்பாசத்தோடு மடியில் இடங்கொடுத்து ஆசுவாசப்படுத்துவன.

- மனிதனுக்கு எல்லாப் பருவத்திலும், எல்லா வகையிலும் உதவுவன – தொட்டில், நடைவண்டி, படிப்பதற்கு ஏடு, கட்டில், ஊன்றுகோல், பாடை, உடலை எரிக்க மரம், தாகத்துக்குப் பானம், பசிக்கு உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு, நோய்க்கு மருந்து, பயணத்துக்குச் சக்கரம், வேலை செய்யும் கைகளுக்கு உதவும் கரங்கள் (கோடரிப்பிடி போன்றன), சுத்தமான காற்று, மழை.

- அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கிற்கும் துணையாய் அமைவது
  அறம் – போதிமரம்
  பொருள் – காவல் மரம், ஊர்ப்பொதுமன்ற மரம்
  இன்பம் – வசந்த மரங்கள்
  வீடு – கல்லால மரங்கள்

- மண்ணின் மைந்தர்களாக விளங்குபவை.

- பிறந்த இடத்தில் பற்றுவைத்து வரவு வைப்பவை.

- இறந்த பின்னும் மனிதனுக்கு உதவுபவை.

- இழிவானவற்றிலிருந்து உயர்வானவற்றை உருவாக்குபவை.
  (புழுதியில் பூக்களையும் கழிநீரில் கனிகளையும் கொடுப்பன)


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

- எல்லா மரங்களும் எல்லாக் கைகளாலும் கொடுக்கின்றன.
- வான் நோக்கி வளர்கின்றன.

[ 15 புள்ளிகள் ]

**5.** திருக்குறள் 'நலம்புனைந்துரைத்தல்' அதிகாரத்தில் மங்கையின் அழகு,

(i) மலரை விட

(ii) மதியை விட

மேம்பட்டதென வலியுறுத்தப்படுமாற்றினை விளக்குக.

(i) **மலரை விட**

- மென்மையாக இருக்கும் அனிச்சம் பூவைவிட தலைவி மென்மையானவள் என்பதன் மூலம்.
- தலைவியின் கண்கள் மலர் போன்று இருப்பதால் பூக்களைக் காணும் வேளையில் அவற்றை இவளது கண் என்று நினைத்து ஏமாந்து விடாதே என்பதன் மூலம்.
- தலைவியின் கண்களுக்கு நாம் ஒப்பாக மாட்டோம் எனக் குவளை மலர்கள் நாணித் தலை கவிழும் என்பதன் மூலம்.
- அனிச்சம்பூவைக் காம்பு நீக்காமல் சூடிக்கொண்டதால் தலைவியின் இடை ஒடிந்தது என்பதன் மூலம்.
- அனிச்சம்பூவும் அன்னத்தின் இறகும் மென்மையானவையாயினும் அவை தலைவியின் பாதங்களை நெருஞ்சி முள்போல வருத்தும் என்பதன் மூலம்.

(ii) **மதியை விட**

- வானத்து நட்சத்திரங்கள் நிலவையும் தலைவியின் முகத்தையும் வேறுபடுத்திக் காண முடியாது மயங்கும் என்பதன் மூலம்.
- சந்திரனிடத்துக் கறை இருப்பதுபோல தலைவியின் முகத்தில் எந்தமறுவும் இல்லையே, ஆகையால் அவளது முகம் சந்திரனை விட மேம்பட்டது எனல்.
- நிலவே என் தலைவியின் முகம்போல ஒளி வீசுவாயானால் நீயும் என் அன்புக்குரித்தாவாய் (தலைவிபோல் நிலவால் ஒளி வீச முடியாது) என்பதன் மூலம்
- நிலவே மலர் போன்ற கண்களையுடைய இவளது முகத்தைப்போன்று நீயும் இருக்க விரும்பினால் பலரும் காணும்படியாகத் தோன்றாதே என்பதன் மூலம்.

[ 15 புள்ளிகள் ]


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**6.** ‘கானல் வரி’யில்,

(i) காவேரியின் வளம்

(ii) சோழ மன்னனின் ஆற்றல்

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

(i) – மதகினூடு பாய்ந்து செல்வதனால் உண்டாக்கும் ஓசையும், கரைகளையும் வரப்புக்களையும் உடைத்துப் பாய்கின்றதால் உண்டாகும் ஓசையும், புதுப்புனல் விழாக் கொண்டாடும் மக்களின் பலவகை ஓசையும் இருபுறமும் சிறந்து ஒலிக்க நடந்து செல்லும் தன்மை உடையது.
(சிறந்த நீர்ப் பெருக்கினை உடையது)

– புதுப்புனல் பெருகிவந்தது கண்டு உழவர் மகிழ்ச்சியினால் ஆர்ப்பரிக்கும் ஓசை உடையது.
(உழவர்களின் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு ஆதாரமாக அமைவது)

– இருபுறமும் வண்டுகள் நெருங்கி ஒலிக்கும்படியாக பூக்களாகிய அழகிய போர்வையைப் போர்த்து நடந்து செல்வது.
(நீர் வளத்தால் இரு கரைகளிலும் வளர்ந்தோங்கிய மரங்களை / சோலைகளை உடையது)

– கரிய கயல் மீன்களாகிய கண்களை விழித்து நளினமாக அசைந்து நடக்கும் தன்மை கொண்டது.
(மீன்கள் நிறைந்தது)

– பூக்கள் மிகுந்த சோலையில் மயில்கள் மகிழ்ந்து ஆடவும் குயில்கள் விரும்பி இசை பாடவும் விரும்பத்தக்க மாலைகள் அருகே அசையவும் நடக்கும் பெருமைக்குரியது.
(இரு கரையிலும் உள்ள சோலைகளில் வாழும் விலங்குகளுக்கு ஆதாரமாக இருப்பது)

– சோழவள நாட்டினைக் குழந்தையாகக் கொண்டு உலகம் உள்ள அளவும் ஓய்வு ஒழிவு இன்றி அதனை வளர்க்கும் தாயாக விளங்குபவள்.
(சோழ நாட்டின் வாழ்வுக்கு, செழிப்புக்கு காரணமாக அமைவது)

(ii) சோழ மன்னனின் ஆற்றல்.

- பூரண சந்திரனை ஒத்த வெண் கொற்றக்குடையினை உடையவன்.
- செங்கோல் வளையாமல் திருத்தமாக ஆட்சி செய்பவன்
- வடக்கேயுள்ள கங்கையையும் தன்னுடையதாக ஆக்கிக் கொண்டவன்.
- தெற்கே பாண்டியனது கன்னியாகுமரியையும் தன்னுடையதாக்கிக் கொண்டவன்.
- காவேரிநதி சோழ நாட்டிலே சிறப்போடு நடப்பதற்கு ஆதாரமான வீரர்களைக் கொண்ட படையை உடையவன்.
- வேல் வலிமையினை உடையவன்.
- உயிர்களைப் பாதுகாக்கும் ஆணைச் சக்கரத்தை உடைய சூரிய வம்சத்தினன்.
- உயிர்களிடத்து அருள் நிறைந்தவன்.

[ 15 புள்ளிகள் ]



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**7.** ‘தெளிவு’ சிறுகதையில்,

(i) கதைக்களம்

(ii) தபாற்காரன் என்ற கதாபாத்திரத்தின் குணாம்சம்

என்பன விவரிக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(i) **இடமும் சூழலும்**

- காற்றை யாரோ கடத்திக் கொண்டு போன பிரமையில் மரங்கள் சோகம் சுமக்கின்றன.
- நிழல்கள் படுத்துறங்கும் செம்மண் பாதை.
- வெள்ளைப் புறாக்கள் துள்ளிக் குதிக்கும் கலவன் பாடசாலை.
- விழுது பரப்பி அடர்ந்து செறிந்த ஆலமரம், துல்லியம் துலங்கும் இறை இல்லமாம் பள்ளிவாசல், குச்சில் வீடுகள், மாடிவீடுகள், தேநீர்க்கடைகள், குப்பைக் கடதாசிகளை மென்று சுவாரசியமின்றிச் செல்லும் கால்நடைகள், செயற்கை முகம் தரிக்காத கிராமத்துப் புன்சிரிப்புக்கள், வர்ணக் கடதாசிகளை கிழித்து வீசுவதைப் போல மொன்டிசூரிப் பிள்ளைகளின் ஊர்வலம்.
- அதிக வெப்பமான கோடைகாலப் பொழுது.
- வானம் கறுப்புப் பர்தாவில் கவலை வளர்த்தல்.
- மழை கிராமத்தைப் காயப்படுத்துதல்.

**ஹாஜியார் கடை**

- தொழுகை முடிந்த நேரமாதலால் தொப்பி அணிந்தவர்களால் ஆரவாரப்படுதல்.
- அண்மையில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் பற்றிய சூடான வாக்குப்போர்.

**தபாற்கந்தோர்**

- எப்போதும் போல சுறுசுறுப்பாக இயங்குதல்.

**வீடு**

- பயங்கர வெறுமையாகக் காட்சியளித்தல், மேசைமீது உணவு தீண்டுவாரற்று இருத்தல்.

(ii) **தபாற்காரன் என்ற பாத்திரத்தின் குணாம்சங்கள்**

- கடமை உணர்வுள்ளவன்.
- இயற்கை அழகில் மனதைப் பறிகொடுப்பவன்.
- மாதச் சம்பளம் பெற்றாலும் பொருளாதார இடர்பாட்டால் பிறரிடம் பணத்தை எதிர்பார்ப்பவன்.
- பணம் கொடாதவரை இழிவாக நினைப்பவன்.
- இயலாமை உடையவர்களைக் கண்டு இரங்கி, உதவும் உள்ளம் கொண்டவன்.
- தன் தவறுகளை நினைத்து அதற்காக வருந்துபவன்.
- நகைச்சுவை உணர்வுள்ளவன்.
- நல்ல கருத்துக்களை மனங் கொள்ளும் தன்மையுடையவன்.
- பெண்களைப் பற்றிய உயரிய சிந்தனை உடையவன்.
- பொருளாதார கஸ்டத்தால் பிழையான வழியில் பணத்தைத் தேட சலனப்படுபவன்.
- குடும்பத் தேவைகளை நிறைவேற்ற முடியாத தனது இயலாமையை எண்ணிக் குமைபவன்.
- மனிதர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளத்தக்கவன்.
- ஒரே தொழிலில் தொடர்ந்து ஈடுபடுவதனால் சலிப்படைபவன்.
- மென்மையான சுபாவம் உடையவன்.
- மனச்சாட்சிக்குப் பயப்படும் இயல்புடையவன்.

[ 15 புள்ளிகள் ]



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/